# சபைக் கூட்டங்கள்

# பகுதி – 01

# அதிகாரம் 1

## அப்போஸ்தலப் பாரம்பரியங்கள் - காலங்கடந்தவைகள்? / பயனற்றவைகள்? (Apostolic Traditions - Obsolete?)

எகிப்து நாட்டிலுள்ள அலெக்ஸாந்திரியாவிலுள்ள புதிதாக உருவாக்கப்பட்ட முதலாம் நூற்றாண்டு சபையானது எருசலேமிலுள்ள பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்குக் கடிதம் எழுதியதாக வைத்துக்கொள்வோம். இந்தச் சபையானது எருசலேமுக்குப் பயணம் செய்த வேளையிலே சுவிஷேசத்தைக் கேட்ட யூத விசுவாசிகளைக் கொண்டிருப்பதாக கற்பனை செய்வோம். அவர்கள் மறுபடியும் தங்கள் தாய் நாடாகிய எகிப்துக்குத் திரும்பி வந்த பிற்பாடு ஒரு புதிய ஏற்பாட்டுச் சபை விசுவாசிகளாக எப்படி பணியாற்றுவதென்று அவர்களுக்கு தெரியாமலிருக்கின்றது. ஆகவே அவர்கள் அப்போஸ்தலர்களுக்கு எழுதிய கடிதத்தில் சபை வாழ்க்கையைக் குறித்து தொடர்ச்சியான கேள்விகளை கேட்டார்கள்.

அன்பான அப்போஸ்தலர்களே....
ஏன் நாங்கள் இயேசு கிறிஸ்துவின் மக்களாக கூடி வர வேண்டும்?
நம்முடைய சபைக் கூட்டங்களில் நாம் என்ன செய்ய வேண்டும்?
எவ்வளவுக்கு அதிகமாக நாங்கள் ஒன்று கூட வேண்டும்?
நாங்கள் எங்கே கூடுகின்றோம் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டுமா?
எருசலேமிலுள்ளது போன்று ஒரு தேவாலயத்தைக் கட்ட வேண்டுமா?
அல்லது ஒரு ஜெப ஆலயத்தையாவது கட்டலாமா?
எவ்வகையான சபை ஆட்சியமைப்பை நாங்கள் கொண்டிருக்க வேண்டும்?
சபைத்தலைவர்களில் நாங்கள் என்னத்தை எதிர்பார்க்க வேண்டும்?
தலைவர்கள் எங்களுக்கு அவசியமா?
கர்த்தருடைய இராப்போஜனத்தின் நோக்கமென்ன?
எவ்வளவுக்கதிகமாக நாங்கள் அதை புசிக்க வேண்டும்?
(பஸ்கா பண்டிகை போன்று வருடத்திற்கு ஒரு முறையா?)
கர்த்தருடைய இராப்போஜனத்தை ஒரு முழுமையான உணவாகவா அல்லது ஒரு அடையாளமான சடங்காச்சாரமான உணவாகவா உண்ண வேண்டும்?

அந்த பன்னிரெண்டு பேரும் எப்படி பதிலளித்திருப்பார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? ஒவ்வொரு சபையும் தான் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றதோ அதைச் செய்வதற்கு அதற்கு சுதந்திரமுண்டு என்று எழுதியிருப்பார்களா? ஒவ்வொரு ஐக்கியமும் நிச்சயமாகவே சுயாதீனமாக ஜெபித்து பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்தலைப் பின்பற்றலாம். ஒவ்வொரு கூட்டமும் அப்போஸ்தலர்களுடைய ஆதிக்கத்திலிருந்து வித்தியாசமானதாயும் தனித்துவமானதாயும் இருக்கலாம் என்று எழுதியிருப்பார்களா? அல்லது மாறாக சபை வாழ்க்கைக்கான குறிப்பான கட்டளைகளோடு கூட சபைக்குப் பதில் அனுப்பியிருப்பார்களா? காரியங்களை ஒரு குறிப்பான விதத்தில் செய்யும்படியாக - ஓர் நிச்சயமான நிகழ்ச்சிநிரலுடன் - தவறமுடியாத சபை வழிகாட்டல்களுடன் பதில் அனுப்பியிருப்பார்களா?

இதே காரியத்திற்குத்தான் கடந்த இரண்டாயிரம் வருடங்களாக விசுவாசிகள் முகம் கொடுத்திருக்கிறார்கள். சபை நடவடிக்கைகளைக்குறித்த புதிய ஏற்பாட்டு ஒழுங்கை இன்றைய திருச்சபை எப்படி குறிப்பாக கண்ணோக்கி பார்க்க வேண்டும்? காலங்கடந்த பழைமை வாய்ந்ததொன்றானதாகவா? ஆதித் திருச்சபையின் செயன்முறை வெறுமனே எங்களுடைய விருப்பத்திற்குரியதா அல்லது தவிர்க்கமுடியாத அளவு இன்றியமையாத ஒன்றானதாகவா? அப்போஸ்தலாகளின் பாரம்பரியம் வெறுமனே சுவாரஷ்யமூட்டும் சரித்திரமா? அல்லது நம்முடைய சபை நடவடிக்கைகளுக்கான ஒரு வித கட்டளையாக உள்ளடக்கப்பட வேண்டுமா?

புதிய ஏற்பாடானது சபை காரியங்களைக் குறித்து நேரடியான கட்டளை மூலமாக ஏறக்குறைய *ஒன்றையும்* சொல்லாதபடியினால் சபைப் பிரச்சனை சிக்கலாக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக சபை ஒழுங்கைக் குறித்து புதிய ஏற்பாட்டின் முன்மாதிரிகளை *விருப்பத்துக்குரியவைகள்* என்று எண்ணி அவற்றைத்தள்ளுவது விசுவாசிகளுக்கு பழக்கமாகிவிட்டது. உதாரணமாக **“ஃபீ உம் ஸ்டுவர்ட்டும்”** (Fee and Stuart) **“*வேதாகமத்தை - இதன் முழுப்பிரயோசனத்தையும் அடையும்படியாக வாசிப்பது எப்படி*”** *(How To Read the Bible For All Its Worth?)* என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

*“மற்றவர்களோடு கூட நம்முடைய அபிப்பிராயமும் என்னவென்றால் நாங்கள் ஒரு காரியத்தைச் செய்யும்படி வேதாகமம் மிகத் தெளிவாகக் கட்டளையிடாவிட்டால் வெறுமனே விபரிக்கப்பட்டவைகள் அல்லது நடந்தவைகள் ஒரு பொழுதும் கட்டளைகளாக இருக்கக்கூடிய விதத்திலே செயற்பட முடியாது.”* [1]

உதாரணமாக, நியாயாதிபதிகள் 11 : 29 தொடக்கம் உள்ள வசனங்களில் காணப்படும் யெப்தாவின் துக்ககரமான உதாரணத்தை பின்பற்றும்படி யாரும் சொல்ல மாட்டார்கள். எங்களுக்கு இருக்கின்ற வினா என்னவென்றால் புதிய ஏற்பாட்டில் விபரிக்கப்பட்ட சபை ஒழுங்கைக் கட்டாயமாக நாங்கள் பின்பற்ற வேண்டும் என்று வேதம் சொல்லுகிறதா இல்லையா என்பதேயாகும்.

அதிகமான சபைகள் *சில* புதிய ஏற்பாட்டு மாதிரிகளைப் பின்பற்றுகின்றன. எங்களுடைய கேள்வி என்னவென்றால் *ஏன் எல்லாவற்றையும் பின்பற்றக்கூடாது?* இப்புத்தகமானது உறுதியாக தொடர்ச்சியாக பின்பற்றுதலைக் (நடைமுறைப்படுத்துவதைக்) குறித்து விவாதிக்கின்றது. சபைகளை ஸ்தாபிப்பதில் அப்போஸ்தலர்களுக்கு ஒரு திட்டமான குறிப்பான முறையொன்று இருந்தது. சபைகள் இருக்கும் வரைக்கும் இதே அப்போஸ்தல பாரம்பரியங்களை எல்லா சபைகளும் பின்பற்ற வேண்டுமென்பதற்காக அவர்கள் இதைச் சிந்தித்து செயல்படுத்தினார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எல்லா உண்மையான சபைகளும் மெதடிஸ்ட்டோ, பிரஸ்பிட்டேரியனோ, பப்டிஸ்ட்டோ, பென்ரிகோஸ்ட்டோ, அங்கிலிக்கனோ அல்லது வேறு எதுவாயினும் சில காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் சபை வரலாற்றுப் பேராசிரியர் ‘‘**ஸ்டான்லி கிறீன்ஸ்டேல் (Stanley Greensdale)**’’ என்பவர் இவ்வாறு கூறுகின்றார். *“சபையானது தேவனுடைய சித்தத்தின்படி தேவனுடைய ஆராதனையை, உள்ளான ஆவிக்குரிய வாழ்க்கையை, உலக சுவிஷேசமயமாக்குதலை, சமுதாயத்தை உருவாக்குவதை (வார்ப்பதை) அதிகரிக்கச்செய்வதற்காகவே இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் இந்தக் குறிக்கோள்களை அடையக்கூடிய அதிசிறந்த பின்னணியை அறிந்தவர்களாகவும், தாங்கள் ஏற்படுத்திய சபைகளில் நமக்காக (நாம் பின்பற்றும்படியாக) அப்படிப்பட்டவைகளை நோக்கத்தோடு வடிவமைத்தார்கள்.”* [2]

## அப்போஸ்தல பாரம்பரியங்களைக் கைக்கொள்வது அர்த்தபுஷ்டியானது (Holding To Apostolic Traditions Is Logical)

I கொரிந்தியர் 4 : 14 – 17 வரையுள்ள வசனங்களில் பவுல் தீமோத்தேயுவைக் கொரிந்துவுக்கு அனுப்பத் திட்டமிட்டதைக் காணுகின்றோம். பவுலுடைய வாழ்க்கையை கொரிந்தியர்கள் பின்பற்றுமுகமாக அவன் அவற்றைக் கொரிந்தியருக்கு நினைவுபடுத்தவேண்டியதாயிருந்தது. ஒரு அப்போஸ்தலனாக ஊழியத்தில் பவுலினுடைய உண்மையுள்ள தன்மையையும் அவனுடைய தாழ்மையையும் சொல்லப்பட்ட சந்தர்ப்பம் கருத்தில் கொள்ளுகின்றது. அப்படி இருக்கும் பொழுது பவுல் எழுதுகிறார்:

*‘‘ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன். நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிறபிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்.’’*

பவுலின் வார்த்தைகளில் தொனித்துள்ள நடைமுறையில் சீரான தன்மையை அவதானியுங்கள். கிறிஸ்துவுக்குள்ளான அவருடைய வாழ்க்கை முறையானது ஒவ்வொரு சபையிலும் ஒவ்வொரு இடத்திலும் அவர் கற்பித்ததோடு கூட முரண்பாடற்றதாகவும் உறுதியாகவும் இருக்கிறது. அங்கே ஒரு உத்தமத் தன்மையினை அவதானிக்கின்றோம். பவுலின் போதனைகளிலிருந்து (அன்றாட) வாழ்க்கை நடைமுறைப் பாரம்பரியங்கள் உருவாகியிருந்தன. அவருடைய விசுவாசம் அவருடைய நடைமுறையைத் தீர்மானித்தது. அவருடைய உபதேசம் இயற்கையாகவே அவருடைய கிரியைகளை தீர்மானித்தது. இதே பிரகாரமாக *சபையின் செயற்பாடுகளைக் குறித்த அப்போஸ்தலர்களுடைய நம்பிக்கைகள் அவர்கள் எப்படி சபைகளை உருவாக்கினார்கள் என்பதில் நிச்சயமாகவே செல்வாக்குச் செலுத்தியிருக்க முடியும்.* (அமைப்பு செயற்பாடுகளை பின் தொடரும் (Form follows the function). I கொரிந்தியர் 4 லிருந்து நேரடியாகப் பெறப்பட்ட இக்கருத்தானது சபைச் செயற்பாடுகளிலிருந்து தொலைவில் இருப்பினும், சபை வாழ்க்கையைக் குறித்து அப்போஸ்தலர்களைப் பின்பற்றுவது எந்தவொரு ஐக்கியத்துக்கும் ஞானமான ஒரு தெரிவாகவே இருக்கிறது. சபையின் நோக்கத்தைக் குறித்து யாராவது உண்மையாகவே விளங்கிக்கொண்டிருப்பார்களானால் அது நிச்சயமாகவே ஆதி அப்போஸ்தலர்களாகவே இருக்கும். அவர்கள் ஆண்டவராகிய இயேசுவினால் தெரிந்தெடுக்கப்பட்டு மூன்று வருடங்கள் தனிப்பட்ட முறையிலே பயிற்றுவிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நம்முடைய கர்த்தர் நாற்பது நாட்களுக்கு மேலாக அவர்களுக்கு காட்சி கொடுத்தார் (அப்போஸ்தலர் 1 : 3).

இறுதியாக ஆண்டவராகிய இயேசு தாம் அவர்களுக்கு முன்னொருபோதும் கற்பிக்காதவைகளைக் கற்பிப்பதற்காக பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார் (யோவான் 14 – 16 வரை). அப்படி இருக்கும் போது ஆண்டவராகிய இயேசு சபையைக் குறித்து தமது அப்போஸ்தலர்களுக்கு என்னவெல்லாம் கற்பித்தாரோ அவைகள் யாவும் அவர்கள் சபைகளை உருவாக்கி ஒழுங்குபடுத்திய விதத்தில் சபைகளில் இயல்பாகவே பிரதிபலித்தன.

சபைச் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புடைய பகுதியான தீத்து 1 : 5 ல் பவுல் இப்படி எழுதுகிறார், *"நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே."*

தீத்து முதலாம் அதிகாரம் ஒவ்வொரு பட்டணத்திலேயும் தகுதியான மூப்பர்களை நியமிப்பது தொடர்பாக பேசுகின்றது. இப்பகுதியிலிருந்து சபையில் செய்யப்படும் காரியங்களைக் குறித்து அப்போஸ்தலர்கள் என்ன விரும்பினார்களோ அதைச் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு தெளிவான உறுதியான ஒரு முறை இருந்ததை கண்கூடாக காணக்கூடியதாக இருக்கின்றது. ஒவ்வொரு திருச்சபையும் தான் விரும்பிய வண்ணமாக காரியங்களை செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. சபையை ஏற்படுத்துவதில் சில விதமான ஒழுங்குகள், முறைமைகள், பாரம்பரியங்கள் பின்பற்றப்பட்டிருந்தன. அதே பிரகாரம் I கொரிந்தியர் 14 : 34 ல் (இன்னுமொரு சபை வாழ்க்கைப் பகுதியாகிய கர்த்தருடைய பந்தியை அனுஷ்டிப்பது குறித்த ஒரு பகுதி) *"மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம்பண்ணுவேன்."* என்று பவுல் எழுதினார். (திட்டம் பண்ணுவேன் என்பதை அவதானிக்கவும்). 1858ல் மேற்கத்திய பப்டிஸ்ட் இறையியலாளரான **ஜெ.எல். டாக் (J.L. Dagg)** இவ்வாறு புத்திக் கூர்மையோடும் மதிநுட்பத்தோடும் எழுதினார்: *"அப்போஸ்தலர்கள் சபையை எப்படி நிறுவி பரிபாலிப்பது என்பதைத் தங்கள் உதாரணத்தின் மூலமாக கற்பித்திருக்கிறார்கள். அவருடைய கட்டளைகளை புறம்பே தள்ளி, நேரிடையான கட்டளையை தவிர வேறு ஒன்றும் எங்களை கட்டுப்படுத்த முடியாது என்று வீம்பாக வலியுறுத்துவதற்கு எங்களுக்கு உரிமையில்லை. நாங்களே கண்டுபிடிக்கும் வழிகளில் நடப்பதற்குரிய தெரிவை விட்டுவிட்டு ஜீவ வார்த்தையினை நமக்குத் தந்த, பரிசுத்த மனிதர்களுடைய காலடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாங்கள் புளகாங்கிதம் அடைய வேண்டும்...... எங்களுடைய அரைகுறைவான ஞானம் தெரிவிக்கின்ற ஆலோசனைகளை விட ஆவியானவருக்கு மதிப்பளித்து அவரால் நடத்தப்படுகிறவர்களுடைய ஒழுங்கமைப்பையும் ஆளுகையையும் தெரிவு செய்வதற்கு நாம் உந்தப்படவேண்டும்."* [3]

## அப்போஸ்தலப் பாரம்பரியங்களை கைக்கொள்வது பாராட்டுக்குரியது (Holding To Apostolic Traditions is Praiseworthy)

I கொரிந்தியர் 10 : 31 லிருந்து 11 : 1 வரையுள்ள பகுதியில் *"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்."* என்று பவுல் மறுபடியும் கொரிந்தியர்களுக்கு வலியுறுத்துவதைக் காணலாம். இவ் வசனம் சொல்லப்படும் சந்தர்ப்பமானது தேவனை மகிமைப்படுத்தும் முகமாக மற்றவர்களுடைய நன்மையைக் கருதி அவர்களை இரட்சிப்புக்குள் கொண்டுவரும் பின்னணியாக இருக்கின்றது. (10 : 31 – 11 : 1) I கொரிந்தியர் 11 : 1 ல் பின்பற்றுங்கள் என்ற வார்த்தையானது **"மிமாடாய்"** என்கின்ற கிரேக்க மொழிச்சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இவ் வார்த்தையே **"மிமிக்" (mimic)** எனும் சொல்லுக்கு ஆதாரமாக இருக்கின்றது. அந்தக் காரியத்தில் கொரிந்திய விசுவாசிகள் தன்னைப் பின்பற்ற வேண்டும் என்று பவுல் விரும்பினார். சொல்லப்போனால் மற்ற காரியங்களில் அவர்கள் பவுலை நன்றாக பின்பற்றிக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் பவுல் அடுத்த வசனத்தில் இதைக் குறித்து குறிப்பிடுகிறார். I கொரி. 11 : 2 - *"சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக்கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன்".*

பாரம்பரியம் என்றால் என்ன? போதனைக்கு சாதாரணமாக பயன்படுத்தப்படும் வார்த்தை ***'டிடஸ்கலியா'*** (இது *டிடாக்டிக்* என்ற கிரேக்க பதத்திற்கு ஆதாரமாகும்). ஆனால் முக்கியமாக அந்த வார்த்தை இங்கு பயன்படுத்தப்படவில்லை. அதற்குப்பதிலாக ***'பரடோஸிஸ்'*** (பாரம்பரியம்) என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. *பரடோஸிஸ்* என்ற இந்த வார்த்தையானது யூத மதத்தில் காணப்படுகின்ற மத அறிவுறுத்தலைக் குறித்த வாய்வழிப்பேச்சுக்குப் பயன்படும் ஒரு கலைச்சொல்லாக இருந்த போதிலும் இந்த சந்தர்ப்பத்தில் நிச்சயமாக இவ்வார்த்தை போதனையைக் குறிக்காமல் ஆராதனையைக் குறித்த மதப் பாரம்பரியங்களைக் குறிக்கின்றது என்று 'கோடன்.ஃபீ' (Gordon Fee) சுட்டிக்காட்டியுள்ளார்.[4] அடிப்படையில் இக்கிரேக்க வார்த்தை கருதுவது "கையளிக்கப்பட்ட அல்லது கடத்தப்பட்ட அல்லது ஒப்புவிக்கப்பட்ட ஒன்றாகும்" [5]. அப்படி ஒப்புவிக்கப்பட்டது எதுவாயும் - மரபு, போதனை, ஒரு நபராக - காட்டிக்கொடுத்தல் அல்லது கைது செய்யப்படுதல் என்ற அர்த்தத்தில் - இருக்கலாம்.[6]

இதே கிரேக்கப் பதமானது I கொரி 11 : 23 ல் (ஒப்புவிக்கப்பட்ட என்ற) வினைச்சொல் வடிவில் கர்த்தருடைய பந்தியின் இறையியலையும் அதை அனுஷ்டிப்பதையும் குறித்து பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கில மொழி வழக்கில் பாரம்பரியம் என்று பொதுவாக கருதப்படுவது மரபு எனப்படுவதாகவும் அல்லது காரியங்களை ஒரு குறிப்பான வழியில் செய்வதாகவும் இருக்கலாம். இது பாரம்பரியமாக வந்த சிந்தனை அல்லது செயலின் மாதிரியாக இருக்கிறது. பாரம்பரியத்தை பற்றி ஒரு பிரசித்தி பெற்ற வரைவிலக்கணம் “மக்கள் காரியங்களை ஒரு கிரமமான முறையில் அல்லது அடிப்படையில் ”*செய்வதாகும்*” என்று கூறுகின்றது. அந்த வகையில் ஒரு பாரம்பரியமானது - உதாரணத்தின் மூலமாகவோ அல்லது வெளிப்படையான போதனை மூலமாகவோ - கையளிக்கப்பட்ட அல்லது ஒப்புவிக்கப்பட்டதொன்றாக இருக்கின்றது.

ஆராதனை விடயத்தில் ஒரு சபையானது தனது பாரம்பரியங்களைப் பேணுவதைக்குறித்து ஒரு அப்போஸ்தலன் புகழ்வதை நாங்கள் இங்கே I கொரி. 11 ல் காணக்கூடியதாக இருக்கின்றது.

I கொரி 11 : 2 ல் “*எல்லாவற்றிலும்*” என்று பவுல் பயன்படுத்திய வார்த்தையை அவதானியுங்கள். இதனுடைய அர்த்தம், அங்கு இருக்கின்ற எல்லாமே அல்லது அந்தப் பாடத்திற்குரியது எல்லாமே என்றாவது பொருள்படும். “*எல்லாவற்றிலும்*” என்று பவுல் எழுதும் போது (I கொரி 11 : 2) அவர் என்ன காரியங்களை சிந்தனையில் வைத்திருந்தார். எல்லாவற்றிலும் என்ற வார்த்தையை அவர் பயன்படுத்திய போது அவர் சிந்தனையின் விஸ்தாரமானது I கொரி 10 : 31 லிருந்து 11 வரையாயுள்ள (சுவிசேச ஊழியம்) அறிவுறுத்தல்களை விட அதிகமானதாக இருந்தது. “*எல்லாவற்றிலும்*” என்பது சபை ஒழுங்கையும் உள்ளடக்கியதாக இருந்திருக்குமோ? ஆம், உண்மையில் அது தான்! I கொரி 11 : 2 ல் உள்ள பவுலின் புகழ்ச்சியானது ஒரு புதிய பாடமாகிய முக்காடிடுதலை (11 : 3 - 16) ஆரம்பிக்கின்ற சமிக்ஞையாக இருக்கின்றது. இப்புதிய பாடமானது நிச்சயமாக சபை நடைமுறையின் பகுதிக்குள்ளாக இருக்கின்றது. (முக்காடிடுதலைக் குறித்த இந்த பகுதியின் சரியான பிரயோகமானது (வியாக்கியமானது) இவ் அதிகாரத்துக்குள் உட்படுத்த முடியாத அளவுக்கு அதிகமாக இருக்கின்றது. ஆனால் அன்றைக்கு இருந்த சபைக்கு என்னவெல்லாம் பொருத்தமாக இருந்ததோ அது இன்றைக்கும் எங்களுக்கு உண்மையாக இருக்கின்றது.

I கொரி 11 : 2 ல் உள்ள *ஒப்புவித்தபடியே* என்கிற வார்த்தை பவுலின் பாரம்பரியங்களோடு எவ்வளவு தூரம் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. அவர்கள் ஒரு எழுத்தின் உறுப்பைக் கூட பின்பற்றினார்கள். அது அப்படியே புகைப்படப் பிரதி (photo copy) ஒன்றை எடுத்தது போல இருக்கிறது! அவர்கள் இதைக்குறித்து ஏனோ தானோ என்று இருக்கவில்லை. பவுல் தான் அவர்களுக்கு ஒப்புவித்த பாரம்பரியங்களை அப்படியே அவர்கள் கைக்கொண்டதின் நிமித்தம் அவர்களைப் புகழ்ந்தார். அப்போஸ்தலரானவர்கள் தாம் ஏற்படுத்திய *சில* பாரம்பரியங்களையாவது (இங்கே முக்காடிடுதல்) சபைகள் துல்லியமாக பின்பற்றவேண்டும் என்று ஏற்படுத்தினார்கள். ‘பாரம்பரியங்கள்’ என்று பன்மையிலே குறிப்பிடப்பட்ட இச் சொல்லைப் பாருங்கள் (11 : 2). முக்காடிடுதலைக் குறித்த ஒரு பாரம்பரியத்தை விட அதிகமாக பவுல் சிந்தனையிலே எண்ணியிருந்தார் போலுள்ளது.[7] *இந்த ஒரு பாரம்பரியத்தை மாத்திரம் நாங்கள் பின்பற்றுவதுடன் நின்றுவிட வேண்டுமா அல்லது புதிய ஏற்பாட்டில் அவதானிக்கப்படுகின்ற சபைக்கான எல்லாப்பாரம்பரியங்களைக் கைக்கொள்ள வேண்டுமா?*

மோசேயினுடைய நியாயப்பிரமாணங்கள் எடுத்துக்காட்டான தன்மையுடையனவையாக இருந்தது. சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட நியாயப்பிரமாணமாக இருந்தது. ஒரு சில சட்ட உதாரணங்களே மோசேயினால் பதிவுசெய்யப்பட்டிருந்தன. விசுவாசியானவர் தன் வாழ்க்கையில் அப்பிரமாணம் குறிப்பாக சொல்லாத பகுதிகளில் அப்படிப்பட்ட உதாரண சம்பவங்களை (முன்மாதிரியாக) வைத்து பிரயோகிக்க செயற்பட எதிர்பார்க்கப்பட்டார். உதாரணமாக வயல்வெளிகளில் ஓரங்கள், மூலைகள் ஏழைகள் பொறுக்கி உண்ணும்படியாக அறுவடை செய்யாமல் விட்டுவிட வேண்டும். ஒலிவமரக்கன்றுகளைப் பற்றி ஒன்றுமே பேசப்படவில்லை இதனுடைய அர்த்தம் கோதுமை விவசாயியா ஏழைகளை போஷிக்கும் பாரத்தை ஏற்க வேண்டும். ஆனால் அதே வேளை ஒலிவமரக்கன்றுகளை வைத்திருப்பவர் அவருடைய கடைசி ஒலிவமரக்கன்றுகளில் ஒரு பழத்தையும் விடாமல் அறுவடை செய்யலாமா? கண்டிப்பாக இல்லை. ஒவ்வொரு விவசாயியும் என்ன பயிரிட்டாலும் ஏழைகளுடைய தேவைகளை சந்திப்பதற்காக ஒரு குறித்த பங்கை அறுவடை செய்யாமல் விட்டுவிட வேண்டும். இதே பிரகாரம் அப்போஸ்தலர் பிரமாணங்களை கைக்கொள்வது நமக்கு எடுத்துக்காட்டானதொன்றாக (முன் உதாரணமாக) இருக்கின்றது. சபைகள் அப்போஸ்தலர்களின் குறிப்பான பாரம்பரியங்களை (முக்காடிடுதல் போன்றன) பின்பற்றிய பொழுது மகிழ்ச்சியாயிருந்தார்கள் என்பதை அவதானிப்போமானால் மற்ற காரியங்களிலும் அவ்வுதாரணத்தை பிரயோகிக்க செயற்படுத்த நாம் எதிர்பார்க்கப்படுகின்றோம். இம் முன்மாதிரிகள் அப்போஸ்தலர்கள் சபைகளை ஏற்படத்தும் வேளையில் ஏற்படுத்தப்பட்டவைகளாகும்.

பாரம்பரியத்தைக்குறித்து ஒரு சுவாரஷ்யமான முரண்பாடு போல் தோற்றமளிகும் ஓர் காரியத்தை அவதானிக்கலாம். I கொரி 11:2ல் பவுலினால் பயன்படுத்தப்பட்ட 'பரடோஸிஸ்' என்ற கிரேக்க வார்த்தையானது மத்தேயு 15:1-3ல் ஆண்டவர் இயேசுவினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர் பரிசேயரைப்பார்த்துக் கேட்டார். உங்களுடைய பாரம்பரியத்தினால் தேவனுடைய கட்டளையை ஏன் மீறுகிறீர்கள்? ஆண்டவர் பரிசேயரின் பாரம்பரியத்தை வன்மையாய்க் கண்டித்தார். ஆனால் பவுலோ ஒரு அப்போஸ்தலனுடைய பாரம்பரியங்களைப் பின்பற்றியதற்காக கொரிந்தியரை புகழ்ந்தார். பரிசேயரின் பாரம்பரியங்கள் தேவனுடைய கற்பனைகளை மீறியது. அப்போஸ்தலப் பாரம்பரியமோ கர்த்தரின் கட்டளையோடு ஒத்துப்போகின்றது. பவுல் கொரிந்தியரைப் புகழ்ந்ததிலிருந்து (11:2)அப்போஸ்தலருடைய பாரம்பரியங்களை பின்பற்றுவது புகழ்ச்சிக்குரியது என அறியலாம். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியச் செய்வதற்கு தயக்கத்தை உண்டாக்கும் எந்தவொரு சொந்தசபைப் பாரம்பரியங்களை நாம் கண்டிப்பாக ஏற்படுத்தக்கூடாது. அப்போஸ்தலரகளுடைய மூலப்பாரம்பரியங்களை இல்லாமற் போகச்செய்யும் எந்தவொரு பாரம்பரியங்களையும் நாம் உண்டாக்காமல் இருக்க கண்டிப்பாய் கவனமெடுத்துக்கொள்ள வேண்டும்.

## அப்போஸ்தலப் பாரம்பரியங்களை பின்பற்றுவது உலகளாவியது (Holding To Apostolic Traditions is To Be Universal)

முக்காடிடுதலைக்குறித்து வாக்குவாதம் பண்ண மனதாயிருந்தவர்களை மற்ற எல்லா சபைகளிலும் காணப்படுகின்ற உலகளாவிய நடைமுறையை மேற்கோள் காட்டி அமைதியாயிருக்கும்படி பவுல் சொன்னார்: 1கொரி 11:16ல் *ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்.* என அவர் உரைத்தார்.

இவ்விறுதி வாக்கியமானது வாக்குவாதம் பண்ணியவர்களை ஆதாயப்படுத்தவும் ஏதோவொரு முடிவுக்கு கொண்டுவருவதற்காகவும் உரைக்கப்பட்டது. காரியம் என்னவென்றால் எல்லா சபைகளும் ஒரே காரியத்தைச் செயதுகொண்டிருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். அதாவது ஒருவன் வித்தியாசமாய் இருக்கிறான் என்று உணர்த்துவதே எதிர்பக்கத்திலுள்ளவர்களை அமைதிப்படுத்த போதுமான விவாதமாகும். *எங்கும் ஒரே விதமாக செய்யப்பட வேண்டிய* ஒரு சில நடைமுறைகளுக்கு ஏலவே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது வெளிப்படையானதாக அவதானிக்கதொன்றாகும். அந்த வகையில் 1 கொரி 11:16 ஆனது புதிய ஏற்பாட்டு சபைகளிலுள்ள நடைமுறைகளில் ஒருமைப்பாட்டை குறிக்கிறது.

1 கொரி 14:33b யிலிருந்து 34ல் (சபை நடவடிக்கை குறித்த இன்னொரு பகுதி) உலகளாவிய ரீதியில் சத்தியமாய் இருக்க வேண்டிய இன்னுமொரு காரியத்தைப் பவுல் குறிப்பிடுகின்றார். '*பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது. - சபைகளில் (உங்கள்) ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள் பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை ,அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும் . வேதமும் அப்படியே சொல்லுகிறது.*'(அழுத்தம் என்னுடையது).

இவ்வசனத்தின் சரியான பிரயோகம் எப்படியிருந்தாலும் கீழ்படிவுக்கு ஆதாரமாக எல்லா சபைகளிலும் இருந்த ஒரு உலகலாவிய முறைமையை பவுல் மறுபடியும் எப்படி சுட்டிக்காடடினார் என்பதை அவதானியுங்கள். இறுதியாக 1 கொரி. 14:34 ல் பவுல் கொரிந்தியரை வரிந்து கட்டினார் என்பதை அவதானியுங்கள். "1 கொரி 14:36 *தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்திற்கு மாத்திரமா வந்தது?*" இந்த இரண்டு கேள்விகளுக்குமே அப்பட்டமான பதில் இல்லை என்பதாகும். இது புதிய ஏற்பாட்டு சபைகளுக்குள் காணப்பட்ட நடைமுறைகளின் ஒருமைப்பாட்டை மேலுமாக சுட்டிக்காண்பிக்கின்றது. மற்ற சபைகள் செய்துகொண்டிருந்த காரியங்களை விட கொரிந்தியர்கள் வேறுவிதமாக செய்வதற்கு தூண்டப்பட்டார்கள். எல்லா சபைகளும் தங்களுடைய சபைக் கூட்டங்களில் ஓரே மாதிரியான முறைமைகளைப் பின்பற்ற எதிர்பார்க்கப்பட்டுள்ளன என்பது தெளிவு. இவ்விரு கேள்விகளுமே கொரிந்தியர்கள் மற்ற எல்லா சபைகளில் நடைமுளையோடு ஒத்துப் போக வேண்டும் என்பதற்காக கேட்டகப்பட்ட கேள்விகளாகும். எப்படி அப்போஸ்தலப் பாரம்பரியங்கள் (புதிய ஏற்பாட்டின் நடைமுறைகள்) 1ம் நூற்றாணடில் உலகளாவியதாக இருந்தனவோ அதே போன்று இன்றும் இருக்க வேண்டும் என நாம் விவாதிக்கிறோம்.

சீனாவிலுள்ள வீட்டுச்சபைகளை உருவாக்கியதில் முன்னோடியான 'வோட்ச்மன் நீ' *(Watchman Nee)* என்பவர் தான் எழுதிய ''*சபையும் வேலையும் : வேலையை மறுபடியும் சிந்தித்தல்* '' எனும் புத்தகத்தில் இவ்வாறு எழுதுகிறார். ''*அப்போஸ்தலநடபடிகள் சபைச்சரித்திரத்தின் ஆதியாகமம். பவுலின் காலத்தில் இருந்த சபை ஆவியானவரின் கிரியையின் ஆதியாகமம்.......... நாங்கள் கண்டிப்பாக ஆதிக்குத் (ஆரம்பத்திற்கு) திரும்ப வேண்டும் . ஆரம்பத்தில் தேவன் எங்களுக்கு முன்மாதிரியாக என்னத்தை ஏற்படுத்தினாரோ அது தான் தேவனுடைய நித்திய சித்தமாக இருக்கின்றது. இது தான் தெய்வீக நியமமும் எல்லா காலங்களிலும் எங்களுக்கான மாதிரியுமாகும்... வருங்காலங்களில் மற்றவர்கள் சபையின் மாதிரியைப்பார்த்து அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளும் படியாக தேவன் தம்முடைய சித்தத்தை கட்டளைகளை பிறப்பிப்பதற்கூடாக மாத்திரமல்ல தன்னுடைய சபையின் சில காரியங்களை ஏலவே செய்து வைத்திருப்பதின் மூலமாகவும் வெளிப்படுத்தினார்.*''[8]

## அப்போஸ்தலப் பாரம்பரியங்களை பின்பற்றுவது தேவனுடைய அமைதியான பிரசன்னத்தைக் கொண்டுவருவதாகும். (Holding To Apostolic Traditions Brings God's Peaceful Presence)

*கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் ,சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.* (பிலி. 4:4-7)

பிலிப்பியர் 4: 4 ல் இருந்து 7 வரையான வசனங்களின் பிரதான கருத்து என்னவென்றால் எந்த சூழ்நிலையின் மத்தியிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதன் மூலம் நாங்கள் தேவனுடைய சமாதானத்தை அடைய முடியும் என்பதாகும்.

அடுத்த பந்தியில் (பிலி 4:8-9) பிலிப்பியர் சபைக்கு தேவனுடைய சமாதானத்தை தங்களுடன் எப்படி வைத்துக்கொள்வது என்ற குறிப்பு வழங்கப்பட்டது. இக் குறிப்பானது நம்முடைய சபைகள் எல்லாவற்றிக்கும் உண்மையாக இருக்கிறது. பவுல் எழுதினார்: " *கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் ஹகண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள் அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.*"(பிலி 4:8-:9)

பவுலிடத்திலிருந்து என்னவெல்லாம் பிலிப்பியர்கள் கற்றுக்கொண்டார்களோ, பெற்றுக் கொண்டார்களோ கேட்டுக்கொண்டார்களோ அல்லது பவுலின் வாழ்க்கையில் பார்த்தார்களோ அவைகளையெல்லாம் நடைமுறைப்படுத்தும் படி அறிவுறுத்தப்பட்டார்கள் (பிலி 4:9). இவ்வசனம் சொல்லப்பட்ட சூழ்நிலையினுடைய பிரதானபிரயோகமானது கிறிஸ்துவினுடைய தாழ்மையைப் பின்பறறுவதும் , மற்றவர்களுக்கு முதிலிடம் கொடுப்பதும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதுடனும் தொடர்புடையதாக இருக்கின்றது. இதைப் பரந்தளவில் சிநதிப்போமானால் *என்னவெல்லாம்* என்று பவுல் கருதினது பவுல் சபைகளை புதிய ஏற்பாட்டில் எப்படி உருவாக்கினார் என்று நாம் அவதானிப்பதை உள்ளடக்க முடியாதோ? அப்போஸ்தலர்கள் எப்படி சபையை உருவாக்கினார்கள் என்பது பரிசுத்த வேதாகமத்திலிருந்து தெளிவாக இருக்கிறது. அப்போஸ்தலப் பாரம்பரியங்களை இப் பகுதியில் ஒதுக்கித் தள்ளுவது தேவனுடைய ஆசீர்வாதங்களில் சிலவற்றை ஒதுக்கித் தள்ளுவது ஆகும். அப்போஸ்தலர்களுடைய *சபை* நடைமுறையை பின்பற்றுகின்ற ஐக்கியங்கள் தேவனுடைய சமாதானமான பிரசன்னத்தை அதிகளவில் அநுபவிக்கக்கூடுமோ?

## அப்போஸ்தலப் பாரம்பரியங்களை கைக்கொள்வது கட்டளையிடப்பட்டுள்ளது. (Holding To Apostolic Traditions Is Commanded)

2 தெசலோ 2:15ல் தெசலோனிக்க சபையானது பின்வருமாறு பவுலினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது."*ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்.*" இங்கே தெசலோனியர் எழுத்தின் மூலமாகவோ வாய் சொற்களின் மூலமாகவோ அப்போஸ்தலர்களிடமிருந்து பெற்ற முறைமைகளை (பாரம்பரியம் - *பரடோஸிஸ்*) பின்பற்றும்படி மிகக்குறிப்பாக கட்டளையிடப்பட்டார்கள். நாங்கள் இப்போது என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து எங்களுக்கு தனிப்பட்ட முறையிலே வாயின் வார்த்தையினாலே போதிப்பதற்கு அப்பன்னிருவரும் நம்மிடத்தில் இல்லை. எப்படியிருப்பினும் அவருடைய பாரம்பரியங்களை பதிவு செய்த நிருபங்களை உள்ளடக்கிய புதிய ஏற்பாடு நம்மிடத்திலிருக்கின்றது. 2 தெசலோனியர் 2ம் அதிகாரம் ஒட்டுமொத்தமாக சபைப் பாரம்பரியத்தை அல்ல இறுதியில் நடைபெறப்போகும் நிகழ்வுகளைப் பற்றி பேசுகிறது. இருந்தபோதும் "முறைமைகள்/பாரம்பரியங்கள்" (2:15) என்ற வார்த்தை பன்மையில் காணப்படுகின்றது. 2ம் வருகையைக் குறித்த அவருடைய பாரம்பரிய போதனைகளை விட அவ்வெழுத்தாளர் மேலதிகமான சிந்தனைகளை கொண்டவராக இருக்கின்றார். புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்ற சபை ஒழுங்கைக் குறித்த பாரம்பரியத்துக்கும் இதை ஒரு பிரமாணமாக பிரயோகிக்க முடியுமா? சுவாரஸ்யமான விதத்தில் **NIV** ஆங்கில மொழிபெயர்ப்பானது "முறைமைகள்" என்பதற்குப் பதிலாக போதனைகள் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றது. அதற்குக் காரணம் ஒரு பாரம்பரியம் (பரடோஸிஸ்) போதனையை (டிடஸ்கலியா) உட்படுத்துவதாயும் அவ்வசனத்தில் சொல்லப்பட்ட உடனடி சூழ்நிலை இறுதிக்காலங்களைக் குறித்த அப்போஸ்தலர்களுடைய வாய்மொழி பாரம்பரியங்களோடு தொடர்புடையதாகவும் இருக்கிறது.

எவ்வாறாயினும் **KJV, ASV, RSV, NASV** போன்ற ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் "பாரம்பரியங்கள் அல்லது முறைமைகள்" என்றே மொழிபெயர்க்கின்றன. அது *"பரடோஸிஸ்"* என்ற வார்த்தையின் பொருத்தமான மொழிபெயர்ப்பாகும். இப்படியான "முறைமைகள்" என்றழைக்கப்படும் வார்த்தையினுடைய மொழிபெயர்ப்புக்களோடு நாஙடகளட போராட வேண்டி இருக்கிறது. அப்போஸ்தல முறைமைகள் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தாலும் அவைகளைப் பின்பறறுவது ஒரு போதும் கட்டளையிடப்படவில்லை என்று அநேக விசுவாசிகள் சிந்திக்கிறார்கள். இருப்பினும் 2 தெலோனி. 2:15 எதைக் குறிக்கிறது? அப்போஸ்தல முறைமைகளை பின்பற்றுவது உண்மையில் கட்டளையிடப்பட்டுள்ளதா அல்லது வெறுமனே ஆலோசனையாக கூறப்பட்டுள்ளதா? நிச்சயமாக இது கட்டளையிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலப் போதனைகளை மாத்திரம் நாங்கள் பின்பற்றுவதல்ல வேதத்தின் பக்கங்களில் பிரத்தியேகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள அப்போஸ்தல முறைமைகளையும் பின்பற்ற வேண்டும். அப்போஸ்தலர்களுடைய இறையியலை மாத்திரமல்ல, அவர்களுடைய நடைமுறைகளையும் சேர்த்து பின்பற்ற வேண்டும்.

பாரம்பரியங்களைக் குறித்த இதே விதமான நோக்கம் 2 தெசலோனி. 3:6 லிருந்து 7 வரையுள்ள வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. *"மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே."* மேலே குறிப்பிட்ட வாக்கியத்தின் குறிப்பான சூழ்நிலையானது பயன்தரும் வேலை செய்கிறதற்கும் சும்மா சோம்பேறியாக இருப்பதற்கும் இடையிலுள்ள முரண்பாட்டை குறிப்பதாக இருக்கிறது. சூழ்நிலையைப் பார்க்கின்றவிடத்து இப்பாரம்பரியமானது ஒரு கொள்கையைவிட மேலதிகமான ஒரு நடைமுறையைக் குறிக்கிறது. அப்போஸ்தலர்கள் சபைகள் தங்களுடைய பாரம்பரியத்தை இறையியலிலும், நடைமுறைகளையும் பின்பற்றவேண்டுமென்று உறுதியாக விரும்பினார்கள். நாங்கள் அந்த வேதாகம முறைமைகளை இறுதியியலிற்கும் வேலை செய்யும் வழக்கத்திற்கும் *மாத்திரமா* மட்டுப்படுத்த வேண்டும்?

ரோட் ஐலண்ட் (Rhode Island) ஐ ஸ்தாபித்தவரும் (1600 களில்) அமெரிக்காவில் முதல் பப்டிஸ்ட் சபையை உருவாக்கியவருமான ரோஜர் வில்லியம்ஸ் என்பவர்[9] சபைகள் புதிய ஏற்பாட்டு சபை அமைப்பையும் பிரமாணங்களையும் எவ்வளவுக்கு நெருக்கமாக பின்பற்ற வேண்டுமோ அவ்வளவுக்கு பின்பற்ற முயற்சிக்க வேண்டும் என்று கருதிய கிறிஸ்தவத் தலைவர்களுக்கு இன்னுமொரு உதாரணமாக இருக்கிறார். இந்த விசுவாசம் சபைக்கும் அரசுக்கும் இடையேயள்ள பிரிவை வெளிப்படுத்துமுகமாக புதிய ஏற்பாட்டு அமைப்பின் அடிப்படையில் ரோட்ஜலண்ட் காலணியை உருவாக்கத் தூண்டியது.

## மாறாத உறுதியுள்ள தன்மை (Consistency)

சபை நடைமுறைக்கான புதிய ஏற்பாட்டு அமைப்பை உங்களுடைய சபை எவளவு தூரம் பின்பற்றுகிறது. அதை குறித்த தேவனுடைய ஆர்வத்தைக் குறித்து என்ன முடிவுக்கு வரலாம்? புதிய ஏற்பாட்டிலுள்ள எல்லா சபைகளுக்கும் என்னவெல்லாம் ஒரு விதிமுறையான நடைமுறை இருந்ததோ அவைகளெல்லாம் இன்றைய திருச்சபைகளுக்கும் விதிமுறையான நடைமுறையாக இருக்க வேண்டும் என்பது நாங்கள் அறியும் காரியமாக இருக்கின்றது. சிலவேளைகளில் இன்றைய திருச்சபைகளில் நீண்ட காலமாய் இல்லாதிருக்கின்ற ஒரு உயிர்மீட்சி அன்றைய ஆதித்திருச்சபைக்கு இருந்ததற்கான் காரணம் அவர்கள் பின்பற்றிய சபை நடைமுறையே ஆகும்.

வேதாகமம் நேரடியாக ஏதாவது ஒன்றைக் குறித்து கட்டளையிடுமானால் நிச்சயமாகவே நாங்கள் அந்தக்கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். உண்மை என்னவென்றால் வேதாகமம் அப்போஸ்தலர்களுடைய *முறைமைகளை* பின்பற்றும்படி கட்டளையிடுகிறது. (2 தெச. 2:15) "புதிய ஏற்பாட்டில் எப்படியெல்லாம் செய்யப்பட்டதோ அப்படியே கண்டிப்பாக நாங்கள் செய்ய வேண்டுமா" என்பதல்ல. மாறாக, "ஏன் நாங்கள் அதைத் தவிர்ந்த வேறு வழிகளில் காரியங்களை செய்ய விரும்புகிறோம்? " என்பதே உண்மையான கேள்வி.

இன்றைக்கும் சபையால் நிச்சயமாக செய்யப்பட வேண்டிய வெளிப்படையான வேதாகம அப்போஸ்தல பாரம்பரியங்கள் என்ன? இன்றைய திருச்சபையில் சபை நடைமுறைக்காக பின்பற்றப்பட வேண்டிய வேதாகம அப்போஸ்தல நடைமுறைகள் என்ன? (இவைகளை நீங்கள் வாசிக்கும் போது ஆதித்திருச்சபை எப்படி செயலாற்றியது என்பதைக் குறித்து சபைப் பாகுபாடு அல்லாமல் வேத வல்லுனர் வட்டாரங்களில் ஒரு பொதுவான இணக்கப்பாடு இருந்தது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.)

*1) கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு முழுமையாக ஐக்கிய உணவாக (ஐ கொரி. 11:17-34) வாரந்தோறும் (அப். 20:20, ஐ கொரி. 11:17-22,) கொண்டாடப்பட்டது. இதுவே ஒவ்வொரு வாரமும் கூடிவருதலுக்கு பிரதான காரணமாக இருந்தது (அப். 20:7, ஐ கொரி. 11:33).*
*2) எல்லோரும் பங்குபெறும் சபைக் கூட்டங்கள். (ஐ கொரி. 14:26-37, எபி. 10:24-25) பரஸ்பர பக்தி விருத்தி உற்சாகம் ஐக்கியம் சபையின் நோக்கமாக இருந்தது (அப் 2:42, ஐ கொரி. 14:3-5-12-26, எபி. 10:24-25).*
*3) ஒத்துப்போகுதலுக்கூடான சபை ஆட்சியமைப்பு. மூப்பர்களால் அதிகாரமாய் ஆளுகை செய்யப்படுவதை விட மூப்பர்களால் வழிநடத்தப்படும் சபைகள் (லூக்கா 22:24-27, ஐ பேதுரு 5:1-4). இதை விட சபை மூப்பத்துவமானது ஆண்களுக்குரியதாகவும் பன்மையானதாகவும், அதற்கு மேலேயுள்ள வேறு எந்த ஆளுகைக்கும் உட்படாததாகவும், சபைக்குள்ளேயிருந்து உருவாகுவதாகவும், சேவக சிந்தையுடைய தலைமைத்துவமாகவும் இருக்க வேண்டும் (ஐ தீமோ. 3:1-7).*
*4) சிறிய அளவிலான சபைகள் (ரோமர் 16:5, கொலோ. 4:15, பிலமோன் 2) - மற்ற விசுவாசிகளுடனும் மக்களுடனும் ஒரே சிந்தையுடையதான ஒரு வீட்டில் கூடி வரத்தக்க அளவிலான சகைபள். ஒரு வீட்டிலே வெறுமனே கூடிவருதலினால் எந்தவிதமான மந்திரமும் அங்கே நடைபெறுவது இல்லை. அங்கே என்ன நிகழ்கிறது என்பது தான் முக்கியம். ஒரு சிறிய சபையிலே மிகத்திறமையாக காரியங்கள் நிகழும். புதிய ஏற்பாட்டு விதியானது ஒரு குறைவான எண்ணிக்கையுடைய பாரிய சபைகளல்ல (Mega Church) , மாறாக அதிக எண்ணிக்கையான சிறிய சபைகள்.*
*5) கர்த்தருடைய நாளில், வாரத்தின் முதல் நாளில் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலைக் கனம் பண்ணும் படி கிரமமாய்க் கூடி வருதல் (மத். 28:1-7, அப். 20:7, 1 கொரி. 16:1-4, வெளி 1: )*
*6) சபைக் கூட்டங்களில் பெற்றோருடன் பிள்ளைகள் பிரசன்னமாயிருத்தல் (மத். 19:13-15, லூக்கா 2:49-50 அப். 29:5, எபே. 6:1-3 கொலோ. 4:16). அந்த வகையில் சபையானது குடும்பத்தை மேலும் பிரிக்காமல் அவைகளை ஒற்றுமைப்படுத்தி பலப்படுத்தும்.*
*7) அனுதின அன்னியோன்னியத்தை, ஐக்கியத்தை மிக எளிதாக அனுபவிக்கும் ஒரு குடும்பத்தை போன்ற சபை (அப். 2:42-47).*
*8) அடிக்கடிப் சுவிசேசத்தின் பிரயாணம் பண்ணும் சபை ஊழியர்களான அப்போஸ்தலர்கள், மேய்ப்பர்கள் - போதகர்கள் அல்லது சுவிஷேசகர்களின் ஊழியங்களுக்கூடாக புதிய சபைகளை ஸ்தாபித்தலும், பரிசுத்தவான்களை பயிற்றுவித்தலும். (எபே. 4:11-13) அப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் ஒரு உள்ளூர் சபையின் கிரமமான பங்களிக்கின்ற கூட்டங்களை பாதிக்காமல் அதை ஆதரிக்கின்ற பரந்தளவிலான ஊழியங்களை செய்யலாம்.*
*9) வேதாகம போதனைகளை ஆழமாய்க் கற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கிரமமான வேதப்படிப்புக்கள். (அப். 2:42 15:32 20:7, ரோமர் 12:7 , I தீமோ. 5:17)*

நாங்கள் இங்கே மாறாத ஒரு உறுதியான தொடர்ச்சியான கிரமமான ஒரு தன்மையைத்தான் இங்கு விவாதிக்கிறோம். அநேகமான சபைகள் சில ஒழுங்குமுறைகளை பின்பற்றி வருகின்றன - எல்லாம் அல்ல! *ஏன் எல்லாம் அப்படியிருக்கக்கூடாது?* என்று நாங்கள் ஆச்சிரியப்படுகின்றோம். இக்கேள்விக்கான பதில் புதிய ஏற்பாட்டு நடைமுறையை பின்பற்ற விரும்புவர்களிடத்தில் அல்ல மாறாக அதை விட்டு விலகிப்போகிறவர்களிடத்தில்தான் கேட்கப்பட வேண்டும்.ஏனென்றால் எந்த சபைகளுக்கெல்லாம் அப்போஸ்தலருடைய முறைமைகள் ஒப்புவிக்கப்பட்டதோ அந்தச்சபைகள் எல்லாம் அவைகளைப் பின்பற்றவேண்டும் என்று அவர் நம்பிக்கையோடு எதிர்பார்த்தபடியினால் இந்த உறுதியாக பின்பற்றும் தன்மை விஷேசித்த வகையில் முக்கியமாக இருக்கிறது (I கொரி. 11:2).

## ஆபத்துக்கள் (Dangers)

**உயிரில்லாத தன்மை** - சபை வாழ்க்கையைக் குறித்து நாங்கள் மிக அவதானமாக இருக்க முன் எங்கள் உள்ளான வாழ்க்கையை சரிப்படுத்த வேண்டும்! சபை அமைப்பை விட முதலாவது உள்ளான வாழ்க்கையே அவசியம் (யோவான் 10:10). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு ஜீவனுண்டாகவும் அவை பரிபூரணப்படவுமே வந்தார். ஒரு திராட்சைரசப் போத்தலானது திராட்சரசம் இல்லாவிட்டால் ஏறக்குறைய பயனற்றது. அதே போன்று ஆவியானவரின் ரசம் இல்லாத நேர்த்தியான சரியான சபை நடைமுறை வெறுமையான கோதான ஒரு பாத்திரத்துக்கு ஒப்பானதாக இருக்கின்றது. அது காய்ந்து போன முறுகிய விறகுகளை அடுக்கி வைத்துவிட்டு நெருப்பு மூட்டாமல் இருப்பது போல் இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவானவர் தான் திராட்சச்செடி: நாங்கள் தான் கொடிகள். இயேசு கிறிஸ்து இல்லாமல் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது (யோவான் 15:5).

மிக முக்கியமாக உள்ள உயிர்த்தெழுந்த கர்த்தருடன் உள்ள உயிரோட்டமான அனுதின வாழ்க்கையை புறக்கணித்து விட்டு வெளியரங்கமான பூரணமாக்குதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது முட்டாள்தனமான காரியமாகும். இயேசுவானவரே யதார்த்தத்திற்குரியவர். அப்போஸ்தல சபை நடைமுறைகள் அந்த யதார்த்தத்தின் பிரயோகமாகும்.

**அனுமதி(License)** - இயேசுகிறிஸ்துவுக்குள் உள்ளான யதார்த்த வாழ்க்கையை மெய்யாகவே கொண்டிருப்பவர்கள் வெளிப்புறமான நடக்கைககள அல்லது செயல்முறைகள் விருப்பத்திற்குரியவையாகவும் சுயாதீனத்திற்குரியவையாகவும் இருக்கலாம் என்று எண்ணுவதற்கு சோதிக்கப்படுகிறார்கள். பெரிய காரியங்களை (திராட்சரசம்) வைத்திருப்பதன் நிமித்தம் சிறிய காரியங்களை (திராட்சரசத்துருத்தி) தீர்மானிப்பதற்கு தாங்கள் தகுதியானவர்கள் என்று உணருகிறார்கள். வெளியரங்கமான (சபை)அமைப்பைக் குறித்து தங்களுக்கு என்னவெல்லாம் பிரியமாக இருக்கிறதோ அவற்றைச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து தங்களுக்கு ஒரு அனுமதிப் பத்திரம் கிடைத்திருப்பதாக நம்புகிறார்கள். அப்போஸ்தலர்களுடைய வழிகளினாலே கட்டுப்படுத்தப்படுவது ஒரு சிந்தனைனையற்ற முறையில் அவைகளை பிரதிபண்ணுவது எனவும் அது தோல்வியையே தழுவும் எனவும் கருதுகிறார்கள்.

மெய்யாகவே ஒருவனுடைய வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் மையப்படுத்தப்பட்டிருக்குமானால் அவன் தன்னுடைய சொந்தப் பிரயோகங்களை, விருப்பங்களை செய்வதற்கு சுயாதீனமுள்ளவனாக இருக்கிறான். எப்படியிருப்பினும் தவறான கொள்கலனுள் ஊற்றப்படுகின்ற திராட்சரசம் எப்படி வீணாகப் போய்விடும் என்று இயேசு கிறிஸ்து எச்சரித்தாரோ அப்படியான ஒரு நிலமைக்கு அவர் போய்விடுவர் (மத். 9:17). சபைகளை எப்படி ஒழுங்குபடுத்துவது என்று எங்களுக்கு அப்போஸ்தலர்களை விட உண்மையாகவே அதிகம் தெரியுமா? சபை நடைமுறைகளைக் குறித்து மிகக்குறிப்பாக பவுல் எச்சரிக்கையில் *ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன் (1 கொரி 14:37)* என்கிறார். விசுவாசிகள் அவ்வப்போது சில பழைமை வாய்ந்த சபைகளில் காணப்படுகின்ற அடக்கியாளும் ஆட்சிக்கெதிராக தேவைக்கதிகமாக செயற்பட்டு குழப்பவாதிகளாக அல்லது கலகக்காரரானார்கள். அவர்களுடைய சிந்தனையில் அவர்கள் ஸ்தாபன அமைப்புக்கு எதிரானவர்களாக மாறி விட்டார்கள். பார்க்கக்கூடியதும் சரீரத்துக்குரியதுமானவைகள் (visible and physical) தவிர்க்கமுடியாதபடி பார்க்கமுடியாதவைகளுக்கும் ஆவிக்குரியவைகளுக்கும் (invisible and spiritual) எதிராக செயற்படுகிறது என அவர்கள் யோசிக்கிறார்கள். இது ஒரு தவறான பிளவுபடுத்தும் முாண்பாடான சிந்தனையாகும். இது, இயேசு கிறிஸ்துவானவர் மாம்சத்தில் பிறந்தபடியினால் பாவமில்லாதவராக இருந்திருக்க முடியாது அல்லது அவர் பாவமில்லாதவராக இருந்திருப்பாரானால் அவர் மனிதனாக வந்திருக்க முடியாது என்று உரிமை பாராட்டுகின்றவர்களுடைய தவறான சிந்தனைக்கு ஒப்பானதாக இருக்கின்றது. புதிய ஏற்பாட்டு சபையானது மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டதாய் இருந்தது. நம்முடைய கர்த்தருடைய எதிர்பார்ப்புக்கு உண்மையுள்ளவர்களாக நாங்கள் இருப்போமானால் நம்முடைய சபைகளையும் அப்படி ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் நமக்கு இருக்கின்றது.

## சட்டவாதம் (Legalism)

புதிய ஏற்பாட்டு ஒழுங்குகளைப் பின்பற்றுவதற்கு நியாயமான விதிவிலக்குகள் ஏதாவது உண்டா? ஆம். ஓய்வு நாள் மனிதனுக்காக ஏற்படுத்தப்பட்டதே ஒழிய மனிதன் ஓய்வு நாளுக்காக ஏற்படுத்தப்படவில்லை என்பது போல (மாற்கு 2:27) புதிய ஏற்பாட்டு ஒழுங்குகளை கடுமையாக அனுசரிப்பதை விட மக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். இந்த விதிவிலக்குகளைப் பற்றி விளக்கும் போது லண்டன் வீட்டு சபை மேய்ப்பர் “பெரஸ்போர்ட் ஜோப்” (Beresford Job) இவ்வாறு எச்சரிக்கிறார். “*மிகவும் சிக்கலான சூழ்நிலைகளில் செய்யப்படுகின்ற வழிவிலகல்கள் வழக்கமாக வருவதற்கு இடமளிக்காதபடி நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு தண்ணீர் ஞானஸ்நானத்தை எடுத்துக்கொள்வோம். அது உண்மையாகவே செயற்படுத்தப்படும் முறை எந்தவொரு இடத்திலும் கட்டளையிடப்படவில்லையாயினும் ஆதித்திருச்சபை செய்த முறையிலிருந்து (மீண்டும் அப்போஸ்தல பாரம்பரியம்) அது இரட்சிப்பின் பின்னான முழுக்கு ஞானஸ்நானமாக இருக்கின்றது (“பப்டைஸோ” (Baptizo) என்ற வார்தையின் அர்த்தம் முழுகுதல் தான்). புதிய ஏற்பாட்டு முறைமைகளின்படி இது செயற்படுத்தப்பட வேண்டுமாயின் ஒருவருடைய ஞானஸ்நானம் அவருடைய விசுவாசத்தை அறிக்கையிட்ட பிற்பாடு முற்றிலும் தண்ணீரின் கீழ் முழ்கி எடுப்பதாக இருக்க வேண்டும். ஆனால் எழுந்து நடக்க முடியாத நிலையில் கட்டில்கிடக்கையாகவுள்ள ஒருவர் கர்த்தரிடம் வருவதாக வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்டவர் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பது என்பது கேள்விக்கு அப்பாற்பட்டதாகவிருக்கிறது.*

*எனவே வேறு பொருத்தமான முறையில் ஞானஸ்நானம் எடுப்பது விவாதங்களின் பின்னும் அனுமதிக்கக்கூடியதாகவிருக்கிறது.வேதத்தினுடைய உதாரணங்களுக்கு அப்பாற்பட்டதாக இருப்பினும் அதனுடைய நோக்கத்திலும் சிந்தனையிலும் அது கீழ்படிவான ஒரு செயலாகவே இருக்கிறது. ஆயினும் நான் ஞானஸ்நானத்தை குறித்து மேற்சொன்னவைகள் ஒன்றும் சுகதேகிக்கு பிரயோகிக்கப்படமுடியாது. - கர்த்தர் விரும்புகின்ற வண்ணமாக இருப்பதற்கு சாதாரண முறையே (முழுக்கு ஞானஸ்நானம்) பயன்படுத்தப்பட வேண்டும்."* சபை மறுமலர்ச்சியாளர் "டரில் ஏக்கல்" (Darril Erkel) பின்வரும் கூற்றை பொருத்தமாக சுட்டிக்காட்டியுள்ளார். *"புதிய ஏற்பாட்டு ஒழுங்கை விஷேசித்த விதமாய் காண்பிக்கும் ஒரு சட்ட பிரமாணங்களாக நாம் உருவாக்கி விட்டு இப்படித் தான் காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று நாம் எண்ணிவிட்டு அப்படி செய்யாத உடன் சகோதரர்களை தரக்குறைவாக பார்ப்பதும் எங்களை அவரிடமிருந்து தள்ளி வைப்பதும் ஆபத்தாக இருக்கிறது. அவருடைய சபை பிழையானதென்றும் நாங்கள் எவ்வளவுக்கு நெருக்கமாக அப்போஸ்தல முறைமைகளை கைக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு அவர்கள் கைக்கொள்ளாத படியினால் தேவன் அவருடைய சபையை பயன்படுத்த முடியாது என்ற சிந்தனையை மற்றவர்களுக்கு நாம் கொடுக்காத வண்ணம் கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும். அது வெறும் கர்வமே ஒழிய வேறொன்றுமல்ல. மறுபக்கத்தில் சாதுர்யமாகவும் கண்ணியமான முறையிலும் புதிய ஏற்பாட்டு சபையின் செயற்பாடானது சபையின் புதிய ஏற்பாட்டின் ஒழுங்கினால் மிகத்திறமாக நடைமுறைபடுத்தப்படக்கூடியதாக இருக்கும்! அது தேவனுடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அதிக சாதகமானது என்ற சத்தியத்தை விளங்கப்படுத்துவதற்கு வாய்ப்புக்களை தேட வேண்டும்.*

பரிசுத்த வேதாகமமானது ஏதாவது ஒரு காரியத்தைக் குறித்து மௌனமாக இருக்குமானால் - ஒரு கட்டளையோ அல்லது பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கோ இல்லாத நிலையில் - எது எங்களுக்கு பொருத்தமாக இருக்கிறதோ அல்லது தகுதியாக இருக்கிறதோ அதை செய்வதற்கு (பரிசுத்த ஆவியானவுடைய வழிநடத்தலைப் பெற்று) எங்களுக்கு சுதந்திரமுண்டு. ஒரு செயன்முறை அல்லது நடைமுறை வேதாகமத்தில் காணப்படவிட்டால் அதை நாங்கள் செய்ய முடியாது என்று வற்புறுத்தும் எதிர்மறையான வேதவியாக்கியானவியலை (negative hermeneutic) ஆதரிப்பதில்லை. மாறாக ஆதித்திருச்சபைக்கான தெளிவாக காணப்பட்ட விதிமுறையான நடைமுறைகளை நாம் கைக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தும் விதிமுறை வியாக்கியானவியலை (normative hermeneutic) ஆதரிக்கின்றோம். மௌனமாய் இருக்கும் காரியங்கள் சுதந்திரமான/சுயாதீனமான காரியங்களாகும்.

உரோமர் உலகம் என்றோ போய் விட்டது. அப்போஸ்தல முறைமைகளைப் பின்பற்றுவதற்கும் சிறிதும் யோசிக்காதபடிக்கு புதிய ஏற்பாட்டில் காணப்பட்ட ஒவ்வொன்றையும் பிரதிபண்ணுவதற்கும் (காலணிகளை, தொங்கல்களை அணிவது, தோற்சுருளில் எழுதுவது, குப்பிவிளக்கில் படிப்பது போன்றவை) மிகப் பெரிய வேறுபாடுண்டு. திறவுகோல் போன்று முக்கியமான காரியம் என்னவென்றால் புதிய ஏற்பாட்டு சபை நடைமுறைகளை நாம் கண்நோக்கிப் பாரக்கவேண்டும். புதிய ஏற்பாட்டில் மாதிரியாக இல்லாத காரியங்களிலிருந்து முன்மாதிரிகளை உருவாக்கிக்கொள்வதில் நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். உதாரணமாக அப்போஸ்தலர் 4ல் காணப்பட்ட கிறிஸ்தவ சமூக அமைப்பு ஒருகுறிப்பிட்ட சபையில் எப்போதோ நடந்த ஒரு நிகழ்வாகும். இது எக்காலத்திலும் வாழுகின்ற விசுவாசிகளுக்கு ஒரு சிந்திக்கக்கூடிய கருத்தாக இருக்கமுடியுமே தவிர கட்டளையாகவோ வேதாகம மாதிரியாகவோ (முன் உதாரணமாகவோ) இருக்க முடியாது.

## இறுதிக்குறிப்புக்கள் (Concluding Comments)

*1. தேவன் வேதாகம முன்மாதிரிக்கூடாகவும் (வேதாகம பாரம்பரியங்கள் அல்லது முறைமைகள்) வேதாகம கட்டளைக்கூடாகவும் (போதனைகள்) நம்மை நடத்துகிறார்.*

*2. புதிய ஏற்பாட்டில் காணப்பட்ட சபை நடைமுறைகளின் முன்மாதிரிகள் எக்காலங்களிலும் இருக்கின்ற சபைகளால் பொதுவாக பின்பற்றப்பட வேண்டும்.*

*3. வேதாகமத்தில் மாத்திரம் காணப்படுகின்ற அப்போஸ்தலப்பாரம்பரியம் அப்போஸ்தலப் போதனைகளோடு பூரணமாக ஒத்துப்போகின்றது.*

*4. புதிய ஏற்பாட்டு சபையின் வாழ்வில் காணப்படும் பிரதான பாரம்பரியங்களாவன : கர்த்தருடைய இராப்போஜனத்தை வாரந்தோறும் முழுஉணவாக அனுசரித்தல் (I கொரி. 11), கிரமமான (எல்லோரும்) பங்களிக்கும் சபைக்கூட்டங்கள் (I கொரி. 14), ஏகமனதான ஒருமித்த சபை ஆட்சியமைப்பு (மூப்பர் அதிகாரம் செலுத்தப்படுவதை விட மூப்பரால் வழிநடத்தப்படுகின்ற - லூக்கா 22:24 தொடக்கம்), சிறிய அளவிலான சபைகள் (ஒரு வரவேற்பறை அளவுடைய சபைகள் (ரோமர் 16:5) போன்றவையாகும்.*

*5. புதிய ஏற்பாட்டு நடைமுறைகளை பின்பற்றுவது எனும்போது வெறுமனே ரோமக்கலாசாரத்தை (தொங்கல்களை அணிவது, தோற்சுருளில் எழுதுவது, குப்பிவிளக்கேற்றுவது போன்றன) கண்மூடித்தனமாக மறுபடியும் உருவாக்குவதல்ல. இங்கே முக்கியமான காரியம் என்னவென்றால் அச்சபையிற் காணப்பட்ட நடைமுறைகளாகும். இந்நடைமுறைகளை பின்பற்றியிருப்பதிற்கு அங்கே வெளிப்படையான நியாயமான காரணங்கள் இருக்க வேண்டும்.*

*6. புதிய ஏற்பாட்டு நடைமுறையைப் பின்பற்றுதல் எனும் போது ஒவ்வொரு சபையும் அப்படியே ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்பதல்ல. நிச்சயமாகவே அடிப்படையான ஒற்றுமைகள் அங்கே காணப்படும். ஆனால் அந்த அமைப்பின் எல்லைகளுக்குள் சுயாதீனமும் உண்டு.*

*7. வேதாகம வீட்டுத் திருச்சபைகளானது பல பழைமை வாய்ந்த சபைகளைப் போன்று நிகழ்ச்சித் திட்டங்களை சார்ந்ததாகவோ கட்டிடங்களைச் சார்ந்ததாகவோ இருப்பதில்லை. இதனிமித்தம் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட வீட்டுத்திருச்சபைகளானவை திட்டமிட்டு செயற்படாத அமைப்புக்கள் என்று சில தவறான முடிவுக்கு வருகின்றனர். நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் உண்மையாய் இருக்கும் போது அது அவருடைய சபைக்கான பரிபூரண முன்மாதிரியைப் பின்பற்றும் ஒரு சபையை உருவாக்குவதற்கு வழி வகுக்கும். வீட்டுச்சபைகள் ஸ்தாபனங்களைக் போல் இல்லாவிடினும் அவைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதாகவிருக்கிறது. அப்போஸ்தலரால் முன்வைக்கப்பட்ட பாரம்பரியங்களை பின்பற்றுதல் எனும்போது அது திடமான தலைவர்களை உடையதாகவும், கிரமமான ஒழுங்கான கூட்டங்களை, ஆணித்தரமான இறையியலை, சபை ஒழுக்காற்று நடவடிக்கைகளை, வாரந்தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தை அனுஷ்டித்தல் போன்றவற்றை கடைப்பிடிப்பவையாகவும் இருக்கின்றது.*

*8. இக்காரியங்களுக்கு மத்தியில் கிறிஸ்து இல்லாதிருப்பாரானால் இம் முன்மாதிரிகள் வெறும் சட்டப்பிரமாணங்களாயும், இறந்ததுமாகவும், வெறும் கோதாகவும் கோறையாகவும் போய்விடும் (யோவான் 15:5). எங்களுக்கு ஒழுங்கான திராட்சரசத் துருத்தி தேவை; அதைவிட முக்கியமாக திராட்சரசம் அவசியம். இவைகள் இரண்டிற்குமே உரிய இடம் உண்டு. ஒன்றில்லாமல் ஒன்றிருப்பது பிரச்சனைக்குரியதாகவிருக்கிறது. (லூக்கா 5:36-38)*

சம்பவமாக சொல்லப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட காரியங்கள் ஒரு போதும் விதிமுறைகளாக செயற்பட முடியாது என்று ஏற்கனவே பேராசிரியர்கள் பீ∴யும் ஸ்டுவர்டும் (Fee and Stuart) சொன்ன கூற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களின் புத்தகத்தில் இரண்டாவது பதிப்பில் அக்கூற்றை இப்படியாக மாற்றியுள்ளார்கள். *"வேதாகமம் நாம் ஒன்றை கட்டாயமாக செய்ய வேண்டும் என்று தெளிவாக சொல்லாவிட்டால் சம்பவமாக சொல்லப்பட்டவை அல்லது விவரிக்கப்பட்டவை - அது இன்னமாதிரியாகத்தான் செயற்படுத்தப்பட வேண்டும் என்று அதை எழுதியவர் விரும்பியிருக்கிறார் என்ற மறுவாதங்களின் அடிப்படையில் விளங்கப்படுத்தப்படாவிட்டால் - ஒரு விதிமுறையாக செயற்பட முடியாது."*[10]. சபை ஒழுங்கிற்கான முன்மாதிரிகளை சபைகள் பின்பற்றும்படியாக அப்போஸ்தலர்கள் மெய்யாகவே அதனை உருவாக்கினார்கள் என்று நாங்கள் விளக்கிக் காண்பிக்க முயற்சித்துள்ளோம்.

ஏன் மிகப்பெரும்பான்மையான சபைத் தலைவர்கள் ஆதித்திருச்சபை நடைமுறைகளை கடைப்பிடிக்கவில்லலை? காரணம் நாங்கள் இங்கு முன்வைத்த வேதப்பகுதிகளை அவர்கள் படித்து அதன் பிரயோகங்களை ஒதுக்கி தள்ளியதாலா? அப்போஸ்தல பாரம்பரியங்களின் பங்கைக் குறித்து வேதாகம கலாசாலைகளில் மிகசிறிதளவிலான கவனமே செலுத்தப்பட்டுள்ளது எங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து கண்டுகொள்கிறோம். அநேக போதகர்கள் தங்களுடைய சபைப்பிரிவுகளிடமிருந்து ஆண்டாண்டு காலமாகப் பெற்ற வரலாற்று பாரம்பரியங்களை அப்படியே சேர்த்துக்கொண்டார்கள் என்று நாங்கள் சந்தேகிக்கின்றோம். இன்று அநேக சபைகள் அப்போஸ்தலர் காலத்தின் பின்னாலே ஏற்படுத்தப்பட்ட கலாசார சபைப் பாரம்பரியங்களில் வலுவாக ஊறியிருக்கிறார்கள். அப்படியிருக்குமானால் இந்நவீன பாரம்பரியத்தின் நிமித்தம் பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலர்களுக்கூடாக ஏவி உருவாக்கப்பட்ட (வேதாகம) பாரம்பரியங்களை அவமாக்கிவிடும் அபாயம் காணப்படுகிறது (மத்தேயு 15:1-3).

அருட்பணியாளரும் (Missionary) இரத்தசாட்சியாக மரித்தவருமான ஜிம் எலியட் (Jim Elliot) என்பவரின் உணர்வுகளை நாமும் எதிரொலிக்கின்றோம். அவர் இவ்வாறு எழுதினார்: *"புதிய ஏற்பாட்டில் சபைக்கான உலகளாவிய ஒரு முன்மாதிரியை தேவன் வெளிப்படுத்தியுள்ளாரா இல்லையா என்பதிலேயே அச்சு மையம் தங்கியுள்ளது. அவர் அப்படி வெளிப்படுத்தியிருக்காவிட்டால் எந்தக்காரியத்தையும் யாரும் எப்படியும் பின்பற்ற முடியும். ஆனால் சபையினுடைய கூட்டான நடத்தையைப் பொறுத்தவரையில் அவருடைய மணவாட்டியாகிய சபை தெளிவான அறிவுறுத்தல்களோடு விடப்படுவது போன்று கிறிஸ்துவினுடைய இருதயத்திற்கு மிகப்பிரியமானது எதுவுமில்லை என்று நான் உறுதிப்பட நம்புகின்றேன். மேலும் 20ம் நூற்றாண்டு ஒரு சமுதாயத்தை 'சபையாக்குகின்ற' முறையில் இம்முன்மாதிரியை எந்தவொரு விதத்திலும் பின்பற்றவில்லை... தேவனுக்கு சபைக்கான ஒரு மாதிரி இருக்குமானால் அந்தமாதிரியை எப்படியாகிலும் கண்டுபிடித்து அதை ஏற்படுத்துவது என்மேல் விழுந்த கடமையாகவிருக்கிறது".* [11].

## NOTES:

[1] Gordon Fee & Douglas Stuart, *How To Read The Bible For All Its Worth,* 1st ed. (Grand Rapids, MI: Zondervan, 1982), 97.
[2] Stanley Lawrence Greensdale, "Early Christian Church," *Encyclopaedia Britannica,* ed. Warren Preece. Vol.7 (Chicago: William Benton, Publisher, 1973), 844.
[3] J.L. Dagg, *Mannual of Theology: A Treatise on Church Order(*Harrisonburg, VA: Gano Books, 1990*)*, 84-86.
[4] Gorden Fee, *New International Commentary on the New Testament, The First Epistle to The Corinrhians* (Grand Rapids, MI: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 423.
[5] Fritz Rienecker, Linguistic Key to the Greek New Testament (Grand Rapids, MI: Zondervan Publishing House, 1980), 423.
[6] Bauer, Arndt, Gingrich & Danker, A Greek English Lexicon of the New Testament (Chicago: University of Chicago Press, 1979), 615.
[7] Fee, 500.
[8] Watchman Nee, *The Normal Christian Church Life* (Colorado Springs, CO: International Students Press, 1969), 8-9.
[9] Edwin Gaustad, *Liberty of Conscience: Roger Williams In America* (Grand Rapids, MI: Wm. B. Eerdmans Publishing Co.), 106.
[10] Fee & Stuart, 2nd Ed., 106.
[11] Elizabeth Elliot, *Shadow of The Almighty: Life and Testimony of Jim Elliot* (San Francisco, CA: Harper & Row, 1989), 138-139.

## ஆராயப்பட வேண்டிய கேள்விகள் (Discussion Questions)

1. ஆதி அப்போஸ்தலர்களிடம் சபை வாழ்க்கைப்பற்றி எழுதி கேட்க முடியும் என்று வைத்துக்கொள்வோம். சபையின் நடைமுறையைக் குறித்து அவர்களுடைய உதாரணங்களை நீங்கள் பின்பற்ற அவர்கள் உங்களை எதிர்பார்த்தார்கள் என்ற பதிலை தந்திருக்க முடியும் என்று எண்ணுகிறீர்களா? அல்லது நீங்கள் புதிதாய் கண்டுபிடித்த முறைமைகளைக் கையாளும்படி அவர்கள் உங்களை உற்சாகப்படுத்தியிருப்பார்களா? விளக்கவும்.
2. *செயற்பாடுகளை அமைப்பு பின்பற்றுகிறது (Form Follows functions)* என்ற கூற்று அப்போஸ்தலர்கள் முதலாவதாக சபைகளை உருவாக்கி ஒழுங்குபடுத்திய விதத்திற்கு எப்படி பிரயோகிக்கப்பட முடியும்?
3. புதிய ஏற்பாட்டு சபைகளில் ஒரு அடிப்படையான சீரான செயற்பாடுகள் இருந்ததா? அல்லது ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்ததாயும் வித்தியாசமானதாயும் இருந்ததா? என்பதை குறிக்கும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் என்ன?
4. பாரம்பரியங்களைக் கைக்கொண்டமைக்காக பரிசேயரை இயேசுகிறிஸ்து சாடினார். (மத்தேயு 15) , ஆனால் தன்னுடைய பாரம்பரியங்களைக் கைக்கொண்டதற்காக பவுல் கொரிந்தியரைப் புகழ்ந்தார் ( I கொரிந்தியர் 11). ஏன் இந்த வித்தியாசம்?
5. புதிய ஏற்பாட்டில் காணப்படும் அப்போஸ்தலப் பாரம்பரியங்களுக்கும் வரலாற்றில் காணப்படும் ஆதி சபைப் பிதாக்களின் பின்னைய பாரம்பரியங்களுக்குமிடையில் ஒரு வித்தியாசத்தை காண்பிப்பது ஏன் அவசியம்? எதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்? ஏன்?
6. மோசேயின் பிரமாணம் எடுத்துக்காட்டான பிரமாணமாக செயற்பட்டது. குறிப்பான அப்போஸ்தல பாரம்பரியங்களை பின்பற்றும்படியாக எப்படி எடுத்துக்காட்டான பிரமாணம் புதிய ஏற்பாட்டில் உள்ள கட்டளைகளுக்கு பிரயோகிக்கப்பட முடியும்? (II தெசலோனிக். 2:15, 3:6)
7. பவுல் சபைகளை ஒழுங்குபடுத்திய விதத்திற்கு பிலிப்பியர் 4:9ஐ எப்படி பிரயோகிக்கலாம்?
8. எல்லா சபைகளும் இணங்கி பின்பற்றும் படியான ஒரு முன்மாதிரியை உருவாக்கும் அதிகாரத்தை எது அப்போஸ்தலர்களுக்கு கொடுத்தது? (யோவான் 13:20 15:20, அப். 1:1-3, 2:42)
9. அப்போஸ்தல முறைமைகளை அனுசரிப்பதற்கும் புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஒவ்வொன்றையும் (பாதணிகளை அணிவது, தோற்சுருளில் எழுதுவது, குப்பி விளக்கைப் பயன்படுத்துவது, தொங்கல் வஸ்திரத்தை உடுத்துவது போன்றவை) கண்மூடித்தனமாக பிரதிபண்ணுவதற்குமான வேறுபாடு என்ன?
10. இயேசுகிறிஸ்து அவரின் சீஷரின் கால்களைக் கழுவினார். எருசலேம் சபை பொது உடமையை நடைமுறைப்படுத்தியது இதில் எது அப்போஸ்தலப் பாரம்பரியமாக இருக்க உத்தேசிக்கப்பட்டது எது இல்லை என்பதை நாம் எப்படி தீர்மானிக்க முடியும்?
11. இன்றைக்கு அதிகமாக புறக்கணிக்கப்படுகின்ற சபை நடைமுறையோடு சம்பந்தப்பட்ட சில அப்போஸ்தலப் பாரம்பரியங்கள் என்ன?

12. ஆதித்திருச்சபையின் மெய்யான நடைமுறைகளைக் குறித்து வேத வல்லுனர்களிடம் காணப்படுகின்ற பொதுவான ஒருமைப்பாட்டிலிருந்து நாம் என்னத்தைப் பெற முடியும்?
13. இன்றைய திருச்சபை, சபை நடைமுறைகளுக்கான புதிய ஏற்பாட்டு முன்மாதிரிகளை எப்படி மிகத்துல்லியமாக கண்நோக்குகிறது? அப்போஸ்தல முறைமைகள் சுவாரஷ்யம் மூட்டும் வரலாறா அல்லது சபை நடைமுறைகளுக்கான விதிமுறைகளை உண்டாக்குகின்றனவா?
14. பரிபூரணத்திலிருந்து நாம் எல்லோரும் அதிக தூரம் விலகியிருப்பதன் நிமித்தம் “பழைமை வாய்ந்த” முதலாம் நூற்றாண்டு சபை ஒன்றை உருவாக்க முயற்சிப்பது முட்டாள்தனம் என சிலர் எண்ணுகிறார்கள். தேவன் தம்முடைய சபை' குழந்தைப் பருவத்தை கடந்து சென்று வளரவும் முதிர்ச்சியடையவும் எதிர்பார்த்தார் என அவர்கள் விளம்புகிறார்கள். ஒரு சபையாக எப்படி *செயலாற்றக்கூடாது* என்பதற்கு ஆதி விசுவாசிகள உதாரணங்களாகத்தான் நோக்கப்படுகிறார்கள். அதை விட எங்களுடன் ஆதி அப்போஸ்தலர்கள் இல்லாத படியினால் முதலாம் நூற்றாண்டு சபை போல அப்படியே துல்லியமாக நடந்து கொள்வது இயலாத காரியம் எனவும் விவாதிக்கப்படுகிறது. இந்த விவாதத்திற்கு எப்படி மறு உத்தரவு கொடுப்பீர்கள்?
15. ஏன் வரலாற்று சபைப் பாரம்பரியத்துக்கு புதிய ஏற்பாட்டு வரலாற்றுப் பாரம்பரித்தை விட அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது?
16. நீங்கள் ஐக்கியமாவுள்ள ஒரு சபை புதிய ஏற்பாட்டு மாதிரிகளுக்கு அதிக கவனம் செலுத்துகிறதா? அல்லது முற்றாக அவற்றை நிராகரிக்கிறதா? அல்லது உணவகத்தில் விரும்பிய உணவைத் தெரிந்தெடுப்பது போன்று எந்த அப்போஸ்தல முன் உதாரணங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிந்தெடுகிறதா? இதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?